1992 பிப்ரவரி 5]

58—

பார்வையற்றோர்க்கு வேலைவாய்ப்பில் ஒதுக்கீடு.

*3826—

*திரு. உ. பலராமன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பார்வையற்றோர் நல்வாழ்விற்காக அலுவலகங்கள், தொழிற்சாலைகள் ஆகிய இடங்களில் பணியமர்த்துதலில் சதவிகித கணக்கில் இடம் ஒதுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பார்வையற்றவர்களுக்காக அரசு அலுவலகங்களில் ஒரு சதவீத இட ஒதுக்கீடு செய்யவேண்டும் என்கின்ற அரசு ஆணை ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. உ. பலராமன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அரசு அலுவலகங்களில் மட்டுமல்லாது, தொழிற்சாலைகள், கூட்டுறவுத் துறை, தனியார் துறை ஆகிய மூன்று துறைகளிலும் .. .. (மணியடிக்கப்பெற்றது.)

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் அவையின் முன் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

திரு. உ. பலராமன் : அவர்களுக்கு அந்த மூன்று துறைகளிலும் சதவிகிதக் கணக்கில் இடம் ஒதுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீடு ஆணை அரசுத் துறைகளுக்கும், அரசுத் துறை நிறுவனங்களுக்கும் மட்டுமே பொருந்தும். ஆனால் தனியார் நிறுவனங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் இந்த ஒதுக்கீடு விகிதப்படி ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு வேண்டுகோள் விடுத்து வருகிறது. அதிக அளவில் ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பொதுத்துறை, தனியார் நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் பரிசு அளிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. தனபால்.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையற்ற, ஊனமுற்றவர்களில் கல்வித் தகுதி படைத்தவர்களுக்குத்தான் அரசு அலுவலங்களில் இட ஒதுக்கீடு

[1992 பிப்ரவரி 5

தரப்பட்டுக்கொண்டிருக்கிறது. கல்வியறிவற்ற பார்வையற்றவர்கள், ஊனமுற்றவர்கள் போன்றவர்களுக்கும் அரசுதரப்பிலோ அல்லது தனியார் நிறுவனங்களிலோ இட ஒதுக்கீடு அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையற்றோருக்கான தகுதியான வேலை வாய்ப்புகள் குறைவு. இன்னின்ன வேலைகளுக்கு இவர்களை நியமிக்கலாம் என்று 1988-ஆம் ஆண்டின் அரசு ஆணையில் குறிப்பிட்ட வகையில் இயன்ற வரையில் பார்வையற்றோருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசு பொறுப்பேற்றவுடன் படிக்காத பார்வையற்றவர்களுக்கு அரசு அலுவலகங்களில் நாற்காலி பின்னுகின்ற ஒயர் வேலைகளை அளிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி பியாட்ரிக் டிசாசோ.

Dr. BEARIX DSOUZA: Hon'ble Speaker Sir, I would like to know what opportunities the physically handicapped women have in employment?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இலட்சம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவேண்டுமென்கின்ற திட்டத்தின் மூலமாக தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் ஏறக்குறைய 10 ஆயிரம் பெண்களை, ஊனமுற்றவர்களாக உள்ளவர்களை தேர்ந்தெடுக்கவேண்டுமென்கின்ற ஆணையை நம்முடைய தமிழக முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பிறப்பித்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன் முதலாக, உடல் ஊனமுற்றவர்களுக்காக, புரட்சித் தலைவியைத் தவிர வேறு எந்த முதலமைச்சரும் (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையில் எடுத்துச் சொன்னதில்லை என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையற்ற குழந்தைகளுக்கு, வயது வரம்பை கணக்கில் கொள்ளாமல் எல்லா பார்வையற்றவர்களுக்கும் ஒய்வூதியமாகிய 50 ரூபாய் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற நிதிநிலை நெருக்கடியில் இதை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்பதை பேரவைத் தலைவர் மூலமாகத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.